**செயற் பொறியாளர் (வே.பொ), தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர் : திரு.இரா.தாமஸ் பி.இ.(விவ)**

**செ.மு.ஆணை எண். இ/2403/2020** **நாள்: 20.01.2021**

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - திரு.மா.கணேசன், இளநிலை உதவியாளர்(பி.அ), உதவி செயற்பொறியாளர்(வே.பொ) அலுவலகம், தூத்துக்குடி - இளநிலை உதவியாளர்(பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை:
1. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: OPS5/22094/2020 நாள்: 05.08.2020
2. தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: அப2/19591/2020 நாள்: 13.08.2020
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: இ/2403/2020 நாள்: 24.08.2020
4. உதவி செயற்பொறியாளர்(வே.பொ), தூத்துக்குடி அவர்களின் கடித எண்: அ/819/2020 நாள்:01.09.2020
5. தலைமைப் பொறியாளர்(வே.பொ), சென்னை அவர்களின் கடித எண்: அப3/29243/2019 நாள்:20.08.2019
6. உதவி செயற்பொறியாளர்(வே.பொ), தூத்துக்குடி அவர்களின் கடித எண்: அ/819/2020 நாள்:20.01.2020

----------

**ஆணை:**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் 2018-19 மற்றும் 2019-20 -ஆம் ஆண்டு தொகுதி-4 நேரடி போட்டி தேர்வின் மூலம் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு பார்வை(1)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(2)-ல் காணும் செயல்முறை ஆணையின் படி செயற் பொறியாளர்(வே.பொ), தூத்துக்குடி அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(3)-ல் காணும் செயல்முறை ஆணையின் படி உதவி செயற்பொறியாளர்(வே.பொ), தூத்துக்குடி அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.மா.கணேசன் அவர்கள் இளநிலை உதவியாளர்(பி.அ)-ஆக பார்வை(4)-ல் காணும் கடிதத்தின்படி உதவி செயற்பொறியாளர் (வே.பொ), தூத்துக்குடி அலுவலகத்தில் 28.08.2020 முற்பகல் பணியில் சேர்ந்துக்கொண்டார்.

பார்வை (5)-ல் காணும் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின் படி, திரு.மா.கணேசன், இளநிலை உதவியாளர்(பி.அ) அவர்களுக்கு இளநிலை உதவியாளர்(பி.அ) பதவியில் **28.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை** செய்து ஆணையிடப்படுகிறது.

இந்த பணி வரன்முறை ஆணை "The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV for the year 2018-19 and 2019-20 recruitment" எனவும் ஆணையிடப்படுகிறது.

மேலும், தனியர் தகுதிகாண் பருவமான இரண்டாண்டு காலத்தை தொடர்ந்து மூன்று ஆண்டு பணிகாலத்திற்குள் திருப்திகரமாக முடிக்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

20/1/21

செயற் பொறியாளர் (வே.பொ)
தூத்துக்குடி.

**பெறுநர்:**
திரு.மா.கணேசன்
இளநிலை உதவியாளர்(பி.அ)
உதவி செயற்பொறியாளர்(வே.பொ) அலுவலகம்,
தூத்துக்குடி

20/1/21 20/1/21

**மூலம் மற்றும் நகல்:** உதவி செயற்பொறியாளர்(வே.பொ) , தூத்துக்குடி- பணியாளரின் பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை குறித்து உரிய பதிவுகள் மேற்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் அனுப்பிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நகல்:** பணிப்பதிவேடு

**நகல்:** இருப்புக்கோப்பு